# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2333/10 - 2023 මැයි මස 22 වැනි සඳුදා - 2023.05.22

2333/10 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/WM/LND/5/AQUIS/17.
காணி அமைச்சின் இல.: 4-3/12/2018/WS/365.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில் மேற்பிரிவு கோறளையின் சிறு பிரிவில் அலவதுகொட (51ஊ) கிராம அலுவலர் பிரிவில் அலவதுகொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரள் வரைபட இல. 710498, தொகுதி இலக்கம் 02, தாள் இலக்கம் 01 மற்றும் 2023.03.20 ஆந் திகதி கொண்ட வரைபட துண்டு இல. 24 இல் காட்டப்பட்டுள்ள 0.0431 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழே காட்டப்பட்டுள்ள காணித்துண்டு.

1. **துண்டு இல. 24**

காணியின் பெயர்: வெலிஹெல பதன; விபரம்: நீர் தாங்கி அமைக்கப்பட்டுள்ளது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: என். எம். ஜயதிலக, கிரிந்திஎல, போகஹகும்புர; விஸ்தீரணம்: 0.0431 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அக் காணித் துண்டு சம்பந்தமாக கீழே தீர்மானிக்கப்பட்டுள்ள



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நேரத்தில் வெளிமடை பிரதேச செயலகத்தில் என்னை சந்திக்கவும்.

| திகதி | நேரம் | காணித் துண்டு இலக்கம் |
|---|---|---|
| 2023.07.05 | மு.ப. 10.00 | 24 |

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டப். எம். சீ. வீரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை,
2023, மே 18.

EOG 05 - 0203